சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 36/2019

பெயர். திரு. விஜயகுமார் நாள் 24.04.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) விபத்து சம்மந்தமாக என் மைத்துனர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். விபத்து அறப்பேடு கூட்டுச் சாலையில் சாலையைக் கடக்கும்பொழுது ஏற்பட்டது என்றால் சரிதான். என்னை இடித்தாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் ஞாபகம் இல்லை. 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர் மனுதாரர் தனது வாகனத்திற்காக காப்பீடு செய்ய கொடுக்கப்பட்ட காசோலை பணம் இல்லாமல் திருப்பப்பட்டதால் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு முறையான காப்பீடு இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. 1ம் எதிரமனுதாரர் வாகனம் விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்படாததால் 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து நஷ்ட ஈடு வழங்க எவ்வித கடப்பாடும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.